‘ஜனநாயகத்தைத் திருடியவர்கள்’: காங்கிரஸ் தலைவர்கள் மீது பாஜக தாக்கு

புது தில்லி, செப். 22: ‘காங்கிரஸ் தலைவர்கள் ஜனநாயகத்தைத் திருடியவர்கள்’ என்று பாஜக சாடியுள்ளது.

காங்கிரஸ் மூத்த தலைவர் சோனியா காந்தி கடந்த 1983-இல் இந்திய குடியுரிமை பெறுவதற்கு மூன்று ஆண்டுகளுக்கு முன்பாகவே இந்திய வாக்காளர் பட்டியலில் இடம்பெற்ற குற்றச்சாட்டு குறித்து விசாரிக்க மறுத்த மாஜிஸ்திரேட் நீதிமன்ற உத்தரவை சிறப்பு நீதிமன்றம் ரத்து செய்ததைக் குறிப்பிட்டு, மேற்கண்ட விமர்சனத்தை பாஜக முன்வைத்துள்ளது.

சோனியா மீதான குற்றச்சாட்டை விசாரிக்க மறுத்து தில்லி மாஜிஸ்திரேட் நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவுக்கு எதிராக சிறப்பு நீதிமன்றத்தில் மறுஆய்வு மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தது. இந்த மனுவை விசாரித்த சிறப்பு நீதிமன்ற நீதிபதி விஷால் கோக்னே, மாஜிஸ்திரேட் நீதிமன்ற உத்தரவை கடந்த திங்கள்கிழமை ரத்து செய்தார்.

மேலும், புகார்தாரரின் வாதங்களை மீண்டும் விசாரிக்க உத்தரவிட்டு, மாஜிஸ்திரேட் நீதிமன்றத்துக்கு வழக்கை திருப்பி அனுப்பினார். சிறப்பு நீதிமன்றத்தின் இந்த உத்தரவை சுட்டிக்காட்டி, பாஜக செய்தித் தொடர்பாளர் பிரதீப் பண்டாரி செய்தியாளர்களிடம் செவ்வாய்க்கிழமை கூறியதாவது:

இப்போது ‘வாக்குத் திருட்டு’ என குற்றஞ்சாட்டும் காங்கிரஸ் தலைவர்கள், தாங்கள் ஆட்சியில் இருந்தபோது ஜனநாயகத்தை திருடும் செயலில் ஈடுபட்டனர். அவர்கள் (காங்கிரஸ் தலைவர்கள்) ‘ஜனநாயகத்தைத் திருடியவர்கள்’.

இந்திய குடிமக்கள் மட்டுமே தேர்தலில் வாக்களிக்க வேண்டுமென நமது சட்டம் கூறுகிறது. ஆனால், இந்திய குடியுரிமை பெறுவதற்கு முன்பாகவே வாக்காளர் பட்டியலில் சோனியா காந்தியின் பெயர் சேர்க்கப்பட்டுள்ளது.

1980-இல் வாக்காளர் பட்டியலில் சோனியா காந்தி பெயர் சேர்க்கப்பட்டபோது, அவர் இந்திய குடிமகனாக இருக்கவில்லை. அப்படியெனில் அவர் எவ்வாறு வாக்களித்தார், போலியான ஆவணங்களைப் பெற அவருக்கு உதவியவர்கள் யார், இந்திரா காந்தி அரசு உதவியதா ஆகிய கேள்விகளுக்கு ராகுல் காந்தி பதிலளிக்க வேண்டும் என்று பிரதீப் பண்டாரி வலியுறுத்தினார்.

மக்கள், தேசப் பாதுகாப்புக்கு நீர் பாதுகாப்பு வழிவகுக்கும்

குடியரசு துணைத் தலைவர் நம்பிக்கை

புதுதில்லி, செப். 22: நீர் பாதுகாப்பு என்பது மக்களின் பாதுகாப்புக்கும் தேசத்தின் பாதுகாப்புக்கும் வழிவகுக்கும் என்று குடியரசு துணைத் தலைவர் சி.பி.ராதாகிருஷ்ணன் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

தில்லியில் உள்ள பாரத மண்டபத்தில் ஒன்பதாவது இந்திய சர்வதேச தண்ணீர் வார விழாவின் தொடக்க நிகழ்ச்சி செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இதில் பங்கேற்று குடியரசு துணைத் தலைவர் சி.பி. ராதாகிருஷ்ணன் பேசியதாவது:

உலக நிலப்பரப்பில் 2.4 சதவீதம் இந்தியாவில் உள்ளது. அதே வேளையில் உலக மக்கள்தொகையில் 18 சதவீதம் பேர் இந்தியாவில் வசிக்கின்றனர். எனினும், உலகின் மொத்த நீர் வளங்களில் 4 சதவீதம் மட்டுமே நம் நாட்டில் உள்ளது.

பருவநிலை மாற்றம், வேகமான நகரமயமாக்கல் நடவடிக்கைகள், மக்கள்தொகை பெருக்கம் ஆகியவற்றால் நீர்தொடர்பான பிரச்னைகள் மிகவும் சிக்கலாகியுள்ளன.

மாநிலங்களுக்கு இடையிலான நீர் பகிர்வு தகராறுகள் பெரிய பிரச்னையாக உள்ளன. நாட்டின் சில பகுதிகள் வறட்சியையும் மற்ற பகுதிகள் வெள்ளத்தையும் எதிர்கொண்டுள்ளன.

தில்லியில் ஒன்பதாவது இந்திய சர்வதேச தண்ணீர் வாரவிழாவை செவ்வாய்க்கிழமை தொடங்கிவைத்த குடியரசு துணைத் தலைவர் சி.பி. ராதாகிருஷ்ணன். உடன் மத்திய ஜல்சக்தித் துறை அமைச்சர் சி.ஆர். பாட்டீல்

பிரதமர் நரேந்திர மோடியின் தலைமை மற்றும் வழிகாட்டுதலில் நதிநீர் பகிர்வு தொடர்பாக மாநிலங்களுக்கு இடையில் 10 ஒப்பந்தங்கள் செய்ய கொள்ளப்பட்டுள்ளன. இதற்கு உதாரணமாக கென்-பெட்வா மற்றும் கிஷாவ் நீர் பங்கீட்டு ஒப்பந்தங்கள் திகழ்கின்றன. ஹிமாசல பிரதேசம், உத்தரகண்ட், ராஜஸ்தான், தில்லி, ஹரியாணா மற்றும் உத்தர பிரதேசம் ஆகிய 6 மாநிலங்கள் நதி நீர் பங்கீட்டுக்காக ஒப்பந்தங்களைச் செய்துகொண்டுள்ளன. இது மத்திய நீர் வள அமைச்சகத்தின் மிகப்பெரிய சாதனையாகும்.

நதி நீர் பகிர்வுக்காக இரண்டு மாநிலங்கள் ஓர் உடன்பாட்டுக்கு வர மறுக்கின்றன. இந்தச் சூழலில் 6 மாநிலங்களை உடன்பாடு செய்துகொள்ள வைப்பது என்பது பெரிய சாதனை.

நீர் பாதுகாப்பு என்பது மக்களின் பாதுகாப்புக்கும் தேசத்தின் பாதுகாப்புக்கும் வழிவகுக்கும். நீரை நியாயமான முறையில் பயன்படுத்துவதும் நீர் பாதுகாப்பும் அவசியம். பருவநிலை மாற்றம், நகரமயமாதல் போன்றவை உருவாக்கும் சவால்களுக்கு இடையே ஆற்றுப் படுகை மேலாண்மை, நிலத்தடி நீர்மட்ட புத்துயிரூட்டும் நடவடிக்கை, மழைநீர் சேகரிப்பு, திறமையான நீர்ப்பாசனம் என்ற ஒருங்கிணைந்த அணுகுமுறை அவசியம்.

மூன்றாவது உலகப் போர் மூண்டால் அதற்குக் காரணமாக நீர்தான் இருக்கும் என்று உலகில் உள்ள அறிவாளிகள் அனைவரும் கூறுகின்றனர். வரும் 2047-ஆம் ஆண்டுக்குள் வளர்ந்த நாடாக உருவெடுப்பது என்ற இலக்கை நோக்கி இந்தியா நகர்ந்து வரும் வேளையில் திறன்வாய்ந்த மற்றும் நீடித்த நீர் மேலாண்மை முக்கியமானதாகும்.பருவநிலையை சமாளிக்கக் கூடிய ஒருங்கிணைந்த நீர் மேலாண்மைக்குத் தேவையான புத்தாக்க தொழில்நுட்ப, அரசியல், சமூக-பொருளாதார ரீதியிலான அணுகுமுறைகளை இந்த நிகழ்ச்சி உருவாக்கும் என்று நம்புகிறேன் என்றார் அவர்.

செப்டம்பர் 22 முதல் 26-ஆம் தேதி வரை ஒருவார காலத்துக்கு நடைபெறும் இந்த நிகழ்ச்சிக்கு பல்வேறு மத்திய அமைச்சகங்கள், மாநில அரசுகள்,சர்வதேச அமைப்புகள், ஆய்வு அமைப்புகள் ஆகியவற்றுடன் இணைந்துமத்திய ஜல் சக்தி அமைச்சகம் ஏற்பாடு செய்துள்ளது.

OMKARA ASSETS RECONSTRUCTION Pvt. Ltd.

ஓம்காரா அஸட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் பிரைவேட் லிமிட்டெட்

CIN : U67100TZ2014PTC020363

பெருநிறுவன அலுவலகம் – கோஹினூர் ஸ்கொயர், 47 வது தளம், N.C. கேல்கர் மார்க், R.G. கட்காரி சௌக், தாதர் (மேற்கு), மும்பை – 400028.

மின்னஞ்சல் : aman.morarka@omkaraarc.com அலைபேசி எண் : 8850593980

பிற்சேர்க்கை – IV–A (பார்க்க – விதி 8(6) க்கான விதி விலக்கு) அசையா சொத்துக்கள் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு

பிணைக்காப்பு, நிதிச்சொத்து மறுசீரமைப்பு மற்றும் பிணைக்காப்பு செயலாக்க சட்டம் 2002 (‘’சர்ஃபாசி சட்டம்’’) மற்றும் பிணைச்சொத்து பாதுகாப்பு (அமலாக்கம்) விதிகள் 2002 ன் விதி 8(6) க்கான விதி விலக்கு – ன் கீழ் அசையா சொத்துக்கள் விற்பனைக்கான மின்னணு ஏல விற்பனை அறிவிப்பு

இதன் மூலம் பொது மக்களுக்கும் குறிப்பாக கடன்தாரர்(கள்) மற்றும் ஜாமீன்தாரர்(கள்) & அடமானதாரர்(களுக்கும்) அறிவிக்கப்படுவது யாதெனில், இதன் கீழ் விவரிக்கப்பட்ட ஜாமீன் பெற்று கடனளித்த கர்னாடகா பேங்க் மற்றும் லட்சுமி விலாஸ் பேங்க் (கூட்டாக “கடன்தாரர்கள்” என்றே அழைக்கப்படும்) – க்கு அடமானம் / கடன் பொறுப்பு ஏற்படுத்தப்பட்ட அசையா சொத்து, அஸட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் பிரைவேட் லிமிட்டெட் (ARCIL) (கர்னாடகா வங்கியால் பணி ஒப்படைவு பெற்றவர்) ன் அதிகாரப்பூர்வ அலுவலரால் 22.07.2022 அன்றும், ஓம்காரா அஸட்ஸ் ரீகன்ஸ்ட்ரக்ஷன் பிரைவேட் லிமிட்டெட் (OARPL) (ARCIL ஆல் பணி ஒப்படைவு பெற்றவர்) ன் அதிகாரப்பூர்வ அலுவலரால் 21.05.2025 அன்றும் அடையாள சுவாதீனம் எடுக்கப்பட்டுள்து. மேலும், கன்ராடகா வங்கி, 13.03.2013 தேதிய பணி ஒப்படைவு ஒப்பந்தத்தின் படி, LSP அக்ரோ லிமிட்டெட் (கடன்தாரர்) ன் கடன்களை ARCIL க்கு பணி ஒப்படைவு செய்யப்பட்டு, கடன்தாரரின் அக்கடனை மேற்கொண்டு OARPL க்கு (ஓம்காரா PS 01/2025–26 ட்ரஸ்ட் – ன் அறங்காவலர் என்ற தகுதியில் செயல்படும்) ஓம்காரா அஸட்ஸ் ரீகன்ஸ்ட்ரக்ஷன் பிரைவேட் லிமிட்டெட் (OARPL) க்கு 15.04.2025 தேதிய பணி ஒப்படைவு ஒப்பந்தத்தின் கீழ், பணி ஒப்படைவு செய்யப்பட்டுள்ளது. மேலும், லட்சுமி விலாஸ் பேங்க் ஆனது பணி ஒப்படைவு ஒப்பந்தத்தின் கீழ், கடன்தாரரின் கடனை கோட்டக் மஹிந்திரா பேங்க் லிமிட்டெட் க்கு பணி ஒப்படைவு செய்துள்ளது. OARPL என்பது நிறுவனங்கள் சட்டம் 1956 ன் கீழ் இணைவு செய்யப்பட்டு, எண். 9, M.P. நகர், 1 வது தெரு, கொங்கு நகர் எக்ஸ்டன்சன், திருப்பூர் – 641 607 ன்ற முகவரியில் பதிவு அலுவலகமும், கோஹினூர் ஸ்கொயர், 47 வது தளம், N.C. கேல்கர் மார்க், R.G. கட்காரி சௌக், தாதர் (மேற்கு), மும்பை – 400028 என்ற முகவரியில் பெருநிறுவன அலுவலகமும் கொண்ட ஒரு நிறுவனமாகும். பணி ஒப்படைவு ஒப்பந்தத்துக்கிணங்க, OARPL ஆனது மொத்த கடன் நிலுவைத்தொகையையும், இதன் கீழ்க்கண்ட ஜாமீன் சொத்துக்களுடன் சேர்த்து இதன் மேற்கண்ட கடன்தாரருக்கு எதிராக ARCIL யிடமிருந்து அடைந்துள்ளது., மேலும் அது நிலுவைத்தொகைகளை வசூலிக்கவும், பிணைக்காப்பு அமலாக்கம் செய்யவும் அதிகாரம் பெற்றுள்ளது.

OARPL ன் அதிகாரப்பூர்வ அலுவலர், நிலுவைத்தொகைகளை வசூலிப்பதற்காக, இதன் கீழ்க்குறிப்பிட்ட ஜாமீன் சொத்துக்களை விற்பனை செய்ய இதன் மூலம் உத்தேசித்துள்ளார். அதனால் ஜாமீன் சொத்துக்களை வாங்குவதற்கான விலைப்புள்ளிகள் / விலைகோரல்களை மூடி முத்திரையிட்ட உறையிலிட்டு வரவேற்கப்படுகின்றன. இதன் கீழ்க்கண்ட அட்டவணையில் கண்டுள்ள நிலுவைத்தொகைகளை வசூலிப்பதற்காக, இதில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்கள் சர்ஃபாசி சட்டத்தின் கீழான ஏற்பாடுகளின் கீழான அதிகாரத்தையும், உரிமைகளையும் செயலுறுத்தி “’இருக்கின்ற இடத்தில்” “’இருக்கின்ற நிலையில்” மற்றும் “’இருக்கின்றவற்றுடன்” “’எந்த உதவியையும் எதிர்பாரா வகையில்” மற்றும் “’அடையாள சுவாதீன நிலையிலேயே” என்ற அடிப்படையில் விற்பனை செய்யப்படும்.

கடன்தாரர்(கள்) / ஜாமீன்தாரர்கள் / அடமானதாரர்கள், ஜாமீன் சொத்துக்களின் விபரங்கள், அனைத்து கடன்தாரர்களின் நிலுவைத்தொகைகளை, அடிப்படை விலை, விலைப்புள்ளி அதிகரிப்பு தொகை, டேவணித்தொகை, மற்றும் செரிந்த வில்லங்கங்கள் (ஏதேனும் இருப்பின்) உள்ளிட்ட விபரங்களாவன இதன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளன.

லாட் எண்	கடன்தாரர்(கள்) / ஜாமீன்தாரர்(கள்) / அடமானதாரர்(கள்) பெயர்	ஜாமீன் சொத்து விபரங்களாவன	சொத்தின் உரிமையாளர்	அடிப்படை விலை	விலைப்புள்ளி அதிகரிப்பு தொகை	டேவணித் தொகை
1	1. LSP அக்ரோ லிமிட்டெட் (கடன்தாரர்) 2. திரு B.S. கிருஷ்ணன் (ஜாமீன்தாரர் / அடமானதாரர்) 3. திரு B.S. சந்திரசேகர் (ஜாமீன்தாரர் / அடமானதாரர்) 4. திரு B.S. செல்வகுமார் (ஜாமீன்தாரர் / அடமானதாரர்)	கோட்டக் மஹிந்திரா பேங்க் (முந்தைய லட்சுமி விலாஸ் பேங்க்) உடன் கூட்டு பிணை கடன் பொறுப்பு ஏற்படுத்தப்பட்டு, சேலம் மாவட்டம், சேலம் தாலுக்கா, சேலம் மேற்கு இணை III சார்பதிவு மாவட்டம், இட்டேரி சாலை, 63, பள்ளபட்டி கிராமம், T.S. எண். 92/2, வார்டு எண். E, ப்ளாக் – 7 ல் அமையப்பெற்ற திரு BS சண்முகம் என்பவருக்கு சொந்தமான 0.95 ஏக்கர் பரப்பளவு கொண்ட தொழிற்சாலை இடம்., இதன் எல்லைகளாவன – வடக்கு – கையலிங்க உடையார் சொத்து, தெற்கு – பெருமாள் சொத்து, கிழக்கு – இட்டேரி சாலை, மேற்கு – 16 அடி சாலை.	திரு B S சண்முகம்	ரூ. 9,80,00,000/–	ரூ. 10,00,000/–	ரூ. 98,00,000/–
2	5. திரு B.S. மோகன்குமார் (ஜாமீன்தாரர் / அடமானதாரர்) – காலஞ்சென்றவர் – அவரது சட்டப்பூர்வ வாரிசு திருமதி L.R. சுசீத்திரா தேவி என்பவர் மூலம்., 6. திரு B.S. அருணாச்சலம் (ஜாமீன்தாரர் / அடமானதாரர்) – காலஞ்சென்றவர் – அவரது சட்டப்பூர்வ வாரிசுகள் திருமதி B.A. வசந்தா அருணாச்சலம், திருமதி R. புவனேஸ்வரி, திருமதி கவிதா சிவகுமார் & திருமதி டாக்டர் சங்கீதா ராம்குமார் ஆகியோர் மூலம்., 7. திருமதி. சுகந்தி கிருஷ்ணன் (ஜாமீன்தாரர்)	கோட்டக் மஹிந்திரா பேங்க் (முந்தைய லட்சுமி விலாஸ் பேங்க்) உடன் கூட்டு பிணை கடன் பொறுப்பு ஏற்–படுத்தப்பட்டு, T.S. எண். 92/4 ல் அமையப்பெற்ற திரு BS அருணாச்சலம் என்பவருக்கு சொந்தமான 9651 சதுர அடி (சூரமங்கலம் பிரதான சாலை அருகில் கட்டப்பட்ட 1270 சதுர அடி கணேசர் கோவில் நீங்கலாக) மற்றும் TS எண். 92/8 ல் உள்ள மொத்தம் 17,789 சதுர அடி (1270 சதுர அடி பரப்பில் கட்டப்பட்ட கணேசர் கோவில் நீங்கலாக) உள்ளிட்ட தொழிற்சாலை இடம் மற்றும் அதனுடன் கூடிய கட்டிட மேற்பரப்பு உள்ளிட்ட திரு BS அருணாச்சலம் என்பவருக்கு சொந்தமான சொத்து., இதன் எல்லைகளாவன – இனம் எண். 1 – பள்ளபட்டி கிராமம், T.S. எண். 92/4, ப்ளாக் எண். 7, வார்டு E ல் உள்ள, வடக்கு – கிருஷ்ணன் சொத்து, தெற்கு – சூரமங்கலம் பிரதான சாலை, கிழக்கு – 16 அடி பொது வண்டிப்பாதை, மேற்கு – சேலம் கூட்டுறவு சொசைட்டி. **இனம் எண். 2** – பள்ளபட்டி கிராமம், T.S. எண். 92/8, ப்ளாக் எண். 7, வார்டு E ல் உள்ள, வடக்கு – கிருஷ்ணன் சொத்து, தெற்கு – குமரேசி சொத்து, கிழக்கு – 16 அடி பொது வண்டிப்பாதை, மேற்கு – சேலம் கூட்டுறவு சொசைட்டி.	திரு B S அருணாச்சலம்	ரூ. 3,25,00,000/–	ரூ. 3,00,000/–	ரூ. 32,50,000/–
3	8. திருமதி. வசந்தா அருணாச்சலம் (ஜாமீன்தாரர் / அடமானதாரர்) 9. திருமதி. B.C. தாக்ஷாயனி சந்திரசேகர் (ஜாமீன்தாரர்) 10. திருமதி. B. K. சித்ரா குமரேசன் (ஜாமீன்தாரர்) 11. திரு K. சிவகுமார் (ஜாமீன்தாரர் / அடமானதாரர்) 12. திரு C. தர்ம ப்ரகாஷ் (ஜாமீன்தாரர் / அடமானதாரர்) 13. திரு C. கார்த்திக் (ஜாமீன்தாரர் / அடமானதாரர்) 14. திரு K. ராஜ கணேஷ் (ஜாமீன்தாரர் / அடமானதாரர்)	கோட்டக் மஹிந்திரா பேங்க் (முந்தைய லட்சுமி விலாஸ் பேங்க்) உடன் கூட்டு பிணை கடன் பொறுப்பு ஏற்–படுத்தப்பட்டு, T.S. எண். 92/5 ல் அமையப்பெற்ற 6200 சதுர அடி மற்றும் T.S. எண். 92/9 ல் அமையப்பெற்ற 7920 சதுர அடி என மொத்தம் 14120 சதுர அடி பரப்புடன் வார்டு E ப்ளாக்கில் உள்ள தொழிற்சாலை இடம் மற்றும் அதனுடன் கூடிய கட்டிட மேற்பரப்பு உள்ளிட்ட திரு BS கிருஷ்ணன் என்பவருக்கு சொந்தமான சொத்து., இதன் எல்லைகளாவன – **இனம் எண். 1** – சேலம் மாவட்டம், சேலம் தாலுக்கா, பள்ளபட்டி கிராமம், T.S. எண். 92/5, வார்டு E ப்ளாக், சூரமங்கலம் பிரதான சாலையில் உள்ள 6200 சதுர அடி. வடக்கு – அருணாச்சலம் சொத்து, தெற்கு – சந்திரசேகர் சொத்து, கிழக்கு – கூட்டுறவு மார்க்கெட்டிங் சொசைட்டி, மேற்கு – 16 அடி பொது வண்டிப்பாதை **இனம் எண். 2** – சேலம் மாவட்டம், சேலம் தாலுக்கா, பள்ளபட்டி கிராமம், T.S. எண். 92/9, வார்டு E ப்ளாக், சூரமங்கலம் பிரதான சாலையில் உள்ள 7920 சதுர அடி. வடக்கு – அருணாச்சலம் சொத்து, தெற்கு – சந்திரசேகர் சொத்து, கிழக்கு – கூட்டுறவு மார்க்கெட்டிங் சொசைட்டி, மேற்கு – 16 அடி பொது வண்டிப்பாதை	திரு B S கிருஷ்ணன்	ரூ. 2,55,00,000/–	ரூ. 2,50,000/–	ரூ. 25,50,000/–
4	15. திரு B.S. சண்முகம் (ஜாமீன்தாரர் / அடமானதாரர்) – காலஞ்சென்றவர் – அவரது சட்டப்பூர்வ வாரிசுகள் திருமதி செஞ்சுலட்சுமி ரவி, திருமதி சாந்தி சுதாகர், திருமதி B.S. செல்வி & L.R. சுசித்ரா தேவி மற்றும் திருமதி B.S. ஷ்ருதி ஆகியோர் மூலம், 16. திருமதி தேவி அம்மாள் (ஜாமீன்தாரர்) – காலஞ்சென்றவர் – அவரது சட்டப்பூர்வ வாரிசுகள் திருமதி செஞ்சுலட்சுமி ரவி, திருமதி சாந்தி சுதாகர், திருமதி B.S. செல்வி & திருமதி L.R. சுசித்ரா தேவி மற்றும் B.S. ஷ்ருதி ஆகியோர் மூலம், 17. திரு B.S. முரளிதரன் (ஜாமீன்தாரர் / அடமானதாரர்)	கோட்டக் மஹிந்திரா பேங்க் (முந்தைய லட்சுமி விலாஸ் பேங்க்) உடன் கூட்டு பிணை கடன் பொறுப்பு ஏற்–படுத்தப்பட்டு, 90 சென்ட் ((TS எண். 93 & 16/1 ல் உள்ள 45 சென்ட்கள் மற்றும் அதனுடன் கூடிய கட்டிட மேற்–பரப்பு உள்ளிட்ட சொத்து. இதன் எல்லைகளாவன – இனம் எண். 1 – சேலம் மாவட்டம், சேலம் தாலுக்கா, பள்ளபட்டி கிராமம், T.S. எண். 93 ல் (i) திரு. B.S. செல்வகுமார் (ii) திரு. B.S. மோகன் குமார் (iii) திரு. B.S. முரளிதரன் & (iv) திருமதி. வசந்தா ஆகியோருக்கு சொந்தமாக உள்ள 45 சென்ட்., இதன் எல்லைகளாவன – வடக்கு – திரு ரவி பாபு சொத்து, தெற்கு – LSP ஆயில் மில் காம்பவுண்டு, கிழக்கு – சிவராமலிங்க உடையார் சொத்து, மேற்கு – மார்கெட்டிங் சொசைட்டி & மன்னார் செட்டியார் சொத்து **இனம் எண். 2** – பள்ளபட்டி கிராமம்,T.S. எண். 93 & 16/1 ல் (i) திரு. B.K. ஹேமந்த் குமார் (ii) திரு. B.C. தர்ம்ப்–ரகாஷ் (iii) திரு. B.C. கார்த்திக் & (iv) திரு. B.K. ராஜகணேஷ் & (V) திரு. B.K. சிவகுமார் ஆகியோருக்கு சொந்தமாக உள்ள 45 சென்ட்., இதன் எல்லைகளாவன – வடக்கு – சிவராமலிங்க உடையார் சொத்து, தெற்கு – மன்னார் செட்டி இடம் மற்றும் B.P. புருஷோத்தமன் வடையார் சொத்து, கிழக்கு – சிவராமலிங்க உடையார் சொத்து, மேற்கு – 16 அடி இட்டேரி பொது பாதை மற்றும் மன்னார் செட்டி இடம்.	**இனம் எண். 1** திரு B.S. செல்வகுமார் திரு B.S. மோகன் குமார் திரு B.S. முரளிதரன் திருமதி. வசந்தா அருணாச்சலம் **இனம் எண். 2** திரு B.K. ஹேமந்த் குமார் திரு C. தர்ம ப்ரகாஷ் திரு C. கார்த்திக் திரு B.K. ராஜகணேஷ் திரு B.K. சிவகுமார்	ரூ. 7,10,00,000/–	ரூ. 7,00,000/–	ரூ. 71,00,000/–
5	18. திரு B.K. ஹேமந்த் குமார் (ஜாமீன்தாரர் / அடமானதாரர்) 19. வசந்தா அருணாச்சலம் இன்வெஸ்ட்மென்ட்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட்., அதன் நிர்வாக இயக்குனர் திரு B.S. அருணாச்சலம் (அடமானதாரர்) மூலம் பிரதிநிதித்துவப்படுத்தப்படுகிறது 20. ஹேமந்த் குமார் இன்வெஸ்ட்மென்ட்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட்., அதன் நிர்வாக இயக்குனர் திரு B.S. கிருஷ்ணன் என்பவர் மூலம் பிரதிநிதித்துவப்படுத்தப்படுகிறது (அடமானதாரர்) 21. தாக்ஷாயனி இன்வெஸ்ட்மென்ட்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட்., அதன் நிர்வாக இயக்குனர் திரு B.S. சந்திரசேகர் மூலம் பிரதிநிதித்துவப்படுத்தப்படுகிறது (அடமானதாரர்) 22. உஷாராணி இன்வெஸ்ட்மென்ட்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட்., அதன் நிர்வாக இயக்குனர் திரு திரு B.S. சண்முகம் மூலம் பிரதிநிதித்துவப்படுத்தப்படுகிறது (அடமானதாரர்)	கோட்டக் மஹிந்திரா பேங்க் (முந்தைய லட்சுமி விலாஸ் பேங்க்) ன் முதல் கடன் பொறுப்புக்கு கட்டுப்பட்ட (i) M/s வசந்தா அருணாச்சலம் இன்வெஸ்ட்மென்ட்ஸ் (பி) லிமிட்டெட் (ii) M/s ஹேமந்த் குமார் இன்வெஸ்ட்மென்ட்ஸ் (பி) லிமிட்டெட் iii) M/s தாக்ஷயனி இன்வெஸ்ட்மென்ட்ஸ் (பி) லிமிட்டெட் & (iv) M/s உஷாராணி இன்வெஸ்ட்மென்ட்ஸ் (பி) லிமிட்டெட் ஆகியோருக்கு கூட்டாக சொந்தமாக உள்ள 1.36 ஏக்கர் பரப்பளவு கொண்ட தொழிற்சாலை இடம். 1.36 ஏக்கர் பரப்பின் எல்லைகளாவன பினவருமாறு – இனம் எண். 1 – சேலம் மாவட்டம், சேலம் தாலுக்கா, நாய்க்கம்பட்டி கிராமம், சர்வே எண். 24/4K (Part), 24/4L (Part), 24/4M (Part) ல் உள்ள 0.32 ஏக்கர்., எல்லைகளாவன – இளம்பிள்ளை பிரதான சாலை, சர்வே எண். 23 க்கு – வடக்கு, சர்வே எண். 24/4N & 24/4M ல் உள்ள இடங்களுக்கு – தெற்கு, சர்வே எண். 24/2 இடத்துக்கு – கிழக்கு, சர்வே எண். 24/4K, 24/4L & 24/4M இடங்களுக்கு – மேற்கு. இனம் எண். 2 – சேலம் மாவட்டம், சேலம் தாலுக்கா, நாய்க்கம்பட்டி கிராமம், சர்வே எண். 24/4N (Part), 24/4O (Part) ல் உள்ள 0.37 ஏக்கர்., எல்லைகளாவன – சர்வே எண். 24/4M (Part) இடத்துக்கு – வடக்கு, சர்வே எண். 24/4P இடத்துக்கு – தெற்கு, சர்வே எண். 24/2 இடத்துக்கு – கிழக்கு, சர்வே எண். 24/4N (Part), 24/4M (Part) இடங்களுக்கு – மேற்கு. **இனம் எண். 3** – சேலம் மாவட்டம், சேலம் தாலுக்கா, நாய்க்கம்பட்டி கிராமம், சர்வே எண். 24/4P (Part) ல் உள்ள 0.30 ஏக்கர்., எல்லைகளாவன – சர்வே எண். 24/4N & 24/4O இடத்துக்கு – வடக்கு, சர்வே எண். 24/3 இடத்துக்கு – தெற்கு, எண். 12, தும்பதுளிபட்டி கிராமத்துக்கு – கிழக்கு, சர்வே எண். 24/5 இடங்களுக்கு – மேற்கு. இனம் எண். 4 – சேலம் மாவட்டம், சேலம் தாலுக்கா, நாய்க்கம்பட்டி கிராமம், சர்வே எண். 24/3 (புதிய எண். 24/3A 2A) ல் உள்ள 0.37 ஏக்கர்., எல்லைகளாவன – சர்வே எண். 24/4P, M/s உஷாராணி இன்வெஸ்ட்மென்ட்ஸ் (பி) லிமிட்டெட் இடம் & தும்பதுளிபட்டி கிராம எல்லைக்கு – வடக்கு, தும்பதுளிபட்டி கிராம எல்லைக்கு – தெற்கு, சர்வே எண். 24/3, தும்பதுளிபட்டி கிராம எல்லைக்கு – கிழக்கு, சர்வே எண். 24/3 part இடங்களுக்கு – மேற்கு.	வசந்தா அருணாச்சலம் இன்வெஸ்ட்மென்ட்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட்., அதன் நிர்வாக இயக்குனர் திரு B.S. அருணாச்சலம் மூலம் பிரதிநிதித்துவப்படுத்தப்படுகிறது ஹேமந்த் குமார் இன்வெஸ்ட்மென்ட்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட்., அதன் நிர்வாக இயக்குனர் திரு B.S. கிருஷ்ணன் என்பவர் மூலம் பிரதிநிதித்துவப்படுத்தப்படுகிறது தாக்ஷாயனி இன்வெஸ்ட்மென்ட்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட்., அதன் நிர்வாக இயக்குனர் திரு B.S. சந்திரசேகர் மூலம் பிரதிநிதித்துவப்படுத்தப்படுகிறது உஷாராணி இன்வெஸ்ட்மென்ட்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட்., அதன் நிர்வாக இயக்குனர் திரு திரு B.S. சண்முகம் மூலம் பிரதிநிதித்துவப்படுத்தப்படுகிறது	ரூ. 4,30,00,000/–	ரூ. 4,00,000/–	ரூ. 43,00,000/–

கடன்தாரர் பெயர்	நிலுவை		சுவாதீன தேதி	
			அடையாள சுவாதீனம்	
LSP அக்ரோ லிமிட்டெட்	கடனளித்தவர் பெயர்	10.04.2025 ம் தேதியின் படி நிலுவைத்தொகை (ரூ கோடியில்)	பள்ளபட்டி	நாய்க்கன்பட்டி
	OARPL (ARCIL ஆல் பணி ஒப்படைவு பெறப்பட்டவர்)	1,229.30	22.07.2022	21.05.2025
	கோட்டக் மஹித்ரா பேங்க் லிமிட்டெட்	2,095.07		
	மொத்தம்	3,324.37		
	(OARPL மற்றும் இதர கடனளித்தவர்களின் மேற்கொண்டு வரும் நிலுவை மற்றும் அதனுடன் கூடிய இதற் மேற்குறிப்பிட்ட தேதியிலிருந்து வரும் வட்டி, செலவு & செலவுகள் ஆகியவற்றுடன்)			

விலைப்புள்ளி ஆவணங்கள் & டேவணித்தொகைக்கான சான்று ஆகியவற்றை சமர்ப்பிப்பதற்கான கடைசி தேதி மற்றும் நேரம் : 12–10–2026 மாலை 6.00 மணிவரை			மின்னணு ஏல தேதி மற்றும் நேரம் : 13–10–2026 காலை 11.00 மணி முதல் நண்பகல் 12.00 மணி வரை
ஆய்வு தேதி	பள்ளபட்டி : 09–10–2026 நண்பகல் 12.00 மணி முதல் பிற்பகல் 02.00 மணி வரை	நாய்க்கன்பட்டி : 09–10–2026 மாலை 03.00 மணி முதல் 05.00 மணி வரை	கணக்கு எண் : 055505019145, பயனாளி பெயர் : Omkara PS 01/2025–26 Trust, வங்கி பெயர் – ICICI Bank, கிளை : ICICI Bank Towers, IFSC Code : ICIC0000555
ஆய்வுக்கான தொடர்பு நபர் – திரு விக்னேஷ் ஷெட்ஜே – 8451899507, vignesh.shedge@omkaraarc.com			தெரிந்த கடன் பொறுப்புக்கள் – எதுவும் தெரியாது

விற்பனைக்கான விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு OARPL ன் வலைதளம் http://omkaraarc.com/auction.php ல் கொடுக்கப்பட்டுள்ள தொடர்பை தயவு கூர்ந்து பார்வையிடவும்.

ஏலம் OARPL ஆல் நடத்தப்படும். (NEFT/ RTGS மூலம்) டேவணித்தொகையுடன் விலைப்புள்ளி சமர்ப்பிப்பதற்கான கடைசி தேதி (ஆன்லைனிலும், காகித வடிவிலும்) 12.10.2026 மாலை 06.00 மணி. டேவணித்தொகை செலுத்தி, உள்நுழை அடையாளம் & கடவுச்சொல் ஆகியவற்றை பெறுவதிலும், தரவுகளை பதிவேற்றம் செய்வதிலும், விலைப்புள்ளிகளை சமர்ப்பிப்பதிலும் மின்னணு ஏல விலைகோரல் செயல்முறை போன்றவற்றிலும் உதவி தேவைப்படும் விருப்பமுள்ள ஏலதாரர்கள் மின்னணு ஏல சேவைதாரர் “M/s. C1 India Pvt Ltd”, தொலைபேசி உதவி எண் : +91–7291981124 / 25 / 26, உதவிக்கான மின்னஞ்சல் முகவரி : support@bankeauctions.com , மற்றும் திரு பவிக் பாண்டியா, அலைபேசி எண் : 8866682937, மின்னஞ்சல் – maharashtra@c1india.com யை தொடர்பு கொள்ளலாம்., மேலும் சொத்து தொடர்பான விசாரணைகளுக்கு அதிகாரப்பூர்வ அலுவலரை தொடர்பு கொள்ளவும். விருப்பமுள்ள ஏலதாரர்கள் திவால் மற்றும் நொடிப்புநிலை சட்டம் 2016 ன் பிரிவு 29A க்கு கட்டுப்பட்டு அறிவிக்கை வழங்க வேண்டும்., மேலும் விரிவான விபரங்களுக்கு தயவு கூர்ந்து விதிகள் மற்றும் நிபந்தனைகளை பார்வையிடவும்.

பிணைக்காப்பு (அமலாக்கம்) விதிகள் 2002 ன் விதி 8(6) – உ/ப – 9(1) ன் கீழ் விற்பனைக்கான சட்டபூர்வ அறிவிப்பு

இவ்வறிவிப்பானது, மேற்சொன்ன கடன் கணக்குக்கான கடன்தாரர்(கள்)/ஜாமீன்தாரர்(கள்)/அடமானதாரர்(களுக்கு) பிணைக்காப்பு, நிதிச்சொத்து மறுசீரமைப்பு, பிணைச்சொத்து பாதுகாப்பு (அமலாக்கம்) சட்டம் 2002 ன் கீழான ஏற்பாடுகள் மற்றும் பிணைக்காப்பு (அமலாக்கம்) விதிகள் 2002 ன் விதி 8(6) உ/ப – 9(1) ன் கீழ், மின்னணு ஏலம் மூலம் மேற்குறிப்பிட்ட தேதி மற்றும் நேரத்திற்குள் அவரவர்களால் விரும்பப்படும் பட்சத்தில், சர்ஃபாசி சட்டம் 2002 ன் பிரிவு 13(8) ன் படி, இதன் மேற்குறிப்பிட்ட நிலுவைத்தொகையை மேற்கொண்டு வரும் வட்டி மற்றும் அனைத்து செலவுகள் மற்றும் கட்டணங்களுடன் திருப்பி செலுத்தி, சொத்துக்களை மீட்டுக்கொள்ளும் அறிவுறுத்தலுடன் சொத்து விற்பனை செய்யப்படும் என்பதை தெரிவித்து வழங்கப்படும் (30) முப்பது நாட்களுக்கு குறைவிலாது வழங்கப்பட வேண்டிய கட்டாய அறிவிப்பாகும். தொகை செலுத்த தவறும் பட்சத்தில், சொத்து அதிகாரப்பூர்வ அலுவலரின் / ஜாமீன் பெற்று கடனளித்தவரின் அதிகார வரம்பில் பிணைக்காப்பு அமலாக்கம் விதிகள் 2002 ன் விதி 8(5) ல் பரிந்துரைக்கப்பட்ட ஏதேனும் முறையில் விற்பனை செய்யப்படும்.

ஒப்பம்/–

தேதி : 23.09.2026

இடம் : சேலம், தமிழ்நாடு

அமன் மோரார்கா, முதன்மை மேலாளர், அதிகாரப்பூர்வ அலுவலர்

ஓம்காரா (PS 01/2025–26 ட்ரஸ்ட் – ன் அறங்காவலர் என்ற தகுதியில் செயல்படும்) ஓம்காரா அஸட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் பிரைவேட் லிமிட்டெட்.

வலிமையான, நிர்வாகத் திறன்மிக்க நிறுவனங்களை உருவாக்க வேண்டும்

மத்திய நிதியமைச்சர்

புது தில்லி, செப். 22: 2047-ஆம் ஆண்டுக்குள் ‘வளர்ந்த பாரதம்’ என்ற இலக்கை நோக்கிப் பயணிக்கும் நிலையில், இந்திய தொழில் நிறுவனங்கள் வலிமையான, நெகிழ்வுத்தன்மை கொண்ட மற்றும் சிறந்த நிர்வாகத்துடன் கூடிய நிறுவனங்களாக உருவாக வேண்டும் என்று மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் கேட்டுக்கொண்டார்.

தில்லியில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற அகில இந்திய தொழில் நிறுவன நிர்வாகக் கூட்டமைப்பு கூட்டத்தில் பங்கேற்ற மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன்.

தில்லியில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற அகில இந்திய தொழில் நிறுவன நிர்வாகக் கூட்டமைப்புக் கூட்டத்தில் பங்கேற்ற அவர் பேசியதாவது:

இந்திய தொழில் நிறுவனங்கள் மிகப்பெரியதாக உருவெடுப்பதுடன், ஸ்திரத்தன்மை, உயர் தரம், சிறந்த நிர்வாகம் மற்றும் ஆழமான தொழில்நுட்பத் திறன்களையும் ஒருங்கிணைக்கும் நிறுவனங்களை உருவாக்க வேண்டும். சர்வதேச அளவில் இந்தியா மிகப்பெரிய சந்தையாகத் திகழ்கிறது. அதை நாம் அனைவரும் முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அப்போதுதான் நாம் அனைவரும் ஒருங்கிணைந்து வெற்றி பெற முடியும்.

பெரிய நிறுவனங்களை உருவாக்குவது மட்டுமல்லாமல், போட்டிகளைச் சமாளிப்பது, நம்பகத்தன்மை மற்றும் நீண்ட கால வளர்ச்சிக்குப் பங்களிக்கும் வகையில் நெகிழ்வுத்தன்மை கொண்ட நிறுவனங்களை உருவாக்குவதில் தொழில்துறை கவனம் செலுத்த வேண்டும்.

நல்ல நிறுவன நிர்வாகம் என்பது அரசால் விதிக்கப்படும் விதிமுறைகளை ஏற்றுக்கொள்வது மட்டுமல்ல, நிறுவனங்கள் தங்களுக்குத் தாங்களே நிர்ணயித்துக் கொள்ளும் தரநிலைகளும் அதில் முக்கியப் பங்கு வகிக்கின்றன.

நிறுவனங்களுக்கு இடையேயான நம்பிக்கையை கோரிப் பெற முடியாது; இரு தரப்பினரின் செயல்பாடுகள் மூலமே அது உருவாக்கப்பட வேண்டும்.

அரசு மற்றும் ஒழுங்குமுறை அமைப்புகளுடன் நிறுவனங்கள் ஆக்கபூர்வமாக இணைந்து செயல்பட வேண்டும். இந்தியாவின் அடுத்தகட்ட வளர்ச்சி தரத்தை அடிப்படையாகக் கொண்டதாக இருக்க வேண்டும். நிறுவனங்கள் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுக்கு அதிகம் செலவிட வேண்டும்.

‘இந்தியாவில் தயாரிக்கப்பட்டது’ என்பதிலிருந்து ‘இந்தியாவில் சிந்தித்து உருவாக்கப்பட்டது’ என்ற நிலைக்கு உயர வேண்டும். இந்தியா பொருள்களை உற்பத்தி செய்யுமிடமாக மட்டும் இருக்கக் கூடாது. நமது உற்பத்திப் பொருள்கள் தொழில்நுட்ப ரீதியாக மேம்படுத்தப்பட்டு, சர்வதேச சந்தைகளைச் சென்றடைய வேண்டும் என்று நிதியமைச்சர் தெரிவித்தார்.

உ.பி., உத்தரகண்ட், மேற்கு வங்கம்

12 மாநிலங்களவை இடங்களுக்கு அக்.16-இல் தேர்தல்

புது தில்லி, செப். 22: உத்தர பிரதேசம், உத்தரகண்ட், மேற்கு வங்கம் ஆகிய மூன்று மாநிலங்களில் 12 மாநிலங்களவை எம்.பி. இடங்களுக்கு அக்டோபர்16-ஆம் தேதி தேர்தல் நடைபெறும் என்று தேர்தல் ஆணையம் செவ்வாய்க்கிழமை அறிவித்தது.

உத்தர பிரதேசத்தில் 10 எம்.பி.க்கள், உத்தரகண்டில் ஒரு எம்.பி.யின் பதவிக் காலம் நவம்பரில் நிறைவடைவதையொட்டி, இந்த மாநிலங்களில் தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளது. மேற்கு வங்கத்தில் திரிணமூல் காங்கிரஸ் மாநிலங்களவை எம்.பி.யாக இருந்த ருக்மிணி மல்லிக் ராஜிநாமாவைத் தொடர்ந்து, அந்த இடத்துக்கு இடைத்தேர்தல் அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

உத்தர பிரதேசத்தில் மாநிலங்களவை எம்.பி.க்களாக உள்ள பாஜக தேசிய பொதுச் செயலர் அருண் சிங், மத்திய அமைச்சர் ஹர்தீப் சிங் புரி, பாஜக மூத்த தலைவர்கள் கீதா சாக்யா, நீரஜ் சேகர், பிரிஜ்லால், பி.எல்.வர்மா, சீமா துவிவேதி, சமாஜவாதி மூத்த தலைவர் ராம் கோபால் வர்மா, பகுஜன் சமாஜ் கட்சியின் ராம்ஜி கௌதம் ஆகியோரின் பதவிக் காலம் நவம்பர் 25-ஆம் தேதி நிறைவடைகிறது.

இந்த மாநிலத்தில் பாஜக சார்பில் எம்.பி.யாக இருந்த தினேஷ் சர்மாவின் பதவிக் காலமும் நவம்பரில் நிறைவடையவிருந்தது. ஆனால், அந்தமான், நிகோபார் யூனியன் பிரதேச துணைநிலை ஆளுநராக அவர் நியமிக்கப்பட்டதைத் தொடர்ந்து, கடந்த செப்டம்பர்11-இல் தனது பதவியை ராஜிநாமா செய்தார். இந்த 10 எம்.பி. இடங்களுக்கும் (பாஜக 8, சமாஜவாதி, பகுஜன் சமாஜ் தலா 1) அக்டோபர்16-இல் தேர்தல் நடைபெறவுள்ளது.

பாஜகவுக்கு 8, சமாஜவாதிக்கு 2 இடங்கள்: 403 உறுப்பினர்களைக் கொண்ட உத்தர பிரதேச பேரவையில், தற்போதைய எம்எல்ஏக்கள் பலத்தின் அடிப்படையில் பாஜகவுக்கு அதே 8 இடங்களும், சமாஜவாதிக்கு 2 இடங்களும் கிடைக்க வாய்ப்புள்ளது.

பேரவையில் பகுஜன் சமாஜ் கட்சிக்கு உமா சங்கர் சிங் என்ற ஒரேயொரு எம்எல்ஏ மட்டுமே இருந்தார். அவர் கடந்த ஆகஸ்டில் மரணமடைந்ததைத் தொடர்ந்து, அக்கட்சிக்கு ஒரு எம்எல்ஏகூட இல்லை.

கடந்த 2020-இல் 10 மாநிலங்களவை இடங்களுக்கு நடைபெற்ற தேர்தலின்போது, பகுஜன் சமாஜ் வேட்பாளர் வெல்வதற்குத் தேவையான எம்எல்ஏக்கள் பலம் அக்கட்சியிடம் இல்லை. எனினும், பாஜக 8 வேட்பாளர்களை மட்டுமே களமிறக்கியதால், பகுஜன் சமாஜுக்கு ஓரிடம் கிடைத்தது. இதை முன்வைத்து பாஜகவை விமர்சித்த சமாஜவாதி, இரு கட்சிகளுக்கும் இடையே ரகசிய கூட்டு உள்ளதாக சாடினார். உத்தர பிரதேசத்தில் அடுத்த ஆண்டு பேரவைத் தேர்தல் நடைபெறவுள்ளது குறிப்பிடத்தக்கது.

உத்தரகண்டில்...: உத்தரகண்டில் பாஜக சார்பில் மாநிலங்களவை எம்.பி.யாக இருந்த நரேஷ் பன்சாலின் பதவிக் காலம் நவம்பரில் நிறைவடைவதையொட்டி அந்த இடத்துக்கு தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளது. தற்போதைய எம்எல்ஏக்கள் பலத்தின் அடிப்படையில் எம்.பி. பதவியை பாஜக தக்கவைக்கும்.

மேற்கு வங்கத்தில்...: மேற்கு வங்கத்தில் கடந்த ஏப்ரலில் நடைபெற்ற பேரவைத் தேர்தலில் பாஜக அமோக வெற்றி பெற்றதையடுத்து, மம்தாவின் திரிணமூல் காங்கிரஸ் பிளவுபட்டது. திரிணமூல் சார்பில் மாநிலங்களவை எம்.பி.யாக இருந்த ருக்மிணி மல்லிக் தனது பதவியை கடந்த ஜூலையில் ராஜிநாமா செய்தார். கடந்த ஏப்ரலில்தான் இவர் மாநிலங்களவை எம்.பி.யாக தேர்வாகியிருந்தார்.

ருக்மிணி மல்லிக் ராஜிநாமாசெய்ததால்காலியான இடத்துக்கு இடைத்தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளது. மேற்கு வங்க பேரவையில் ஆளும்பாஜகவுக்குமூன்றில் இருபங்குக்கும்மேல்பெரும்பான்மை உள்ளதால் பாஜக எளிதாக வெற்றி பெறும். அந்த எம்.பி.க்கு 2032, ஏப்ரல் 2 வரை பதவிக் காலம் இருக்கும்.

4 மாநிலங்களில் மேலவைத் தேர்தல்

பிகார், கர்நாடகம், மகாராஷ்டிரம், உத்தர பிரதேசம் ஆகிய மாநில சட்ட மேலவைகளில் பட்டதாரிகள்-ஆசிரியர்கள் பிரிவுகளின்கீழ் தேர்வான 28 உறுப்பினர்கள் வரும் நவம்பர், டிசம்பரில் ஓய்வு பெறும் நிலையில், அந்த இடங்களுக்கு அக்டோபர் 23-இல் தேர்தல் நடைபெறும் என்று தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.